# கடமை

மக்கள் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு. கடமை என்றால் தாங்கள் செய்ய வேண்டிய ஒவ்வொரு செயலையும் அந்தந்த நேரத்தில் ஒழுங்காகச் செய்தலாகும். மாணவர்களாகிய எமக்குப் பல கடமைகள் உள்ளன. குறித்த நேரத்திற்குப் பள்ளி செல்லுதல். கூடப் படிக்கும் மாணவர்களுடன் ஒற்றுமையாகப் பழகுதல். ஆசிரியர் கற்பிக்கும் போது பாடத்தை ஒழுங்காகக் கவனித்தல். ஆசிரியர் தரும் வீட்டுப் பாடங்களைத் தவறாமல் செய்தல். ஆசிரியர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல் மாணவர்களுக்குரிய கடமைகளாகும். அத்துடன் பெற்றோர் கூறும் புத்திமதிகளைக் கேட்கவேண்டும். பெற்றோரை மதித்து நடத்தல் வேண்டும். உடன் பிறந்தவர்களுடன் ஒற்றுமையாக விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். அயலவருடன் அன்புடனும் மதிப்புடனும் பழக வேண்டும். மூத்தோரை மதித்து நடக்க வேண்டும். தமிழ்ப் பிள்ளைகளாகிய நாம் ஒருவரை ஒருவர் காணும்போது வணக்கம் கூறி வரவேற்கவேண்டும். இது தமிழர் பண்பாடாகும்.